சார்பு நீதிமன்றம், பொள்ளாச்சி

மனு எண். எம்.சி.ஓ.பி. 43/2018

PW - 1

2025 ம் ஆண்டு ஜுன் திங்கள் 27 ம் நாள் வெள்ளிக்கிழமை (1989 ம் ஆண்டின் 44 வது சட்டத்தின் ஏற்பாட்டின்படி) திரு.எம்.மணிகண்டன், எம்.ஏ., எம்.எல்., சார்பு நீதிபதி, பொள்ளாச்சி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் | கிருஷ்ணவேணி |
| க.பெ. (அ) த.பெ. | வெள்ளிங்கிரி |
| வயது | 52 |
| முகவரி | ஓம்பிரகாஷ் தியேட்டர், பொள்ளாச்சி |

**முதல் விசாரணை**

நான் இம்மனுவில் மனுதாரர் ஆவேன். எனது தரப்பு சாட்சியத்தை நான் சத்தியப்பிரமாணமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான்.

| | |
|---|---|
| 1.மசாஆ 1 - | ஆனைமலை காவல் நிலைய முதல் தகவல் அறிக்கையின் சான்று நகல் |
| 2.மசாஆ 2 - | காயச்சான்று |
| 3.மசாஆ 3 - | TN38BX8251 என்ற வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை |
| 4 மசாஆ 4 - | KN08AX8666 என்ற வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை |
| 5.மசாஆ 5 - | குற்ற அறிக்கை |
| 6.மசாஆ 6 - | குற்ற வழக்கின் தீர்ப்பு நகல் |

7.மசாஆ 7 - விடுவிப்பு சான்றிதழ்

8.மசாஆ 8 - விடுவிப்பு சான்றிதழ்

9.மசாஆ 9 - மருத்துவ பில்களின் தொகுப்பு ரூ.5,47,122/- அது எதிர் தரப்பினரின் ஆட்சேபனைக்குட்டு குறியீடு செய்யப்பட்டது.

10.மசாஆ 10- பிரேத பரிசோதனை அறிக்கை

11.மசாஆ 11 - Histopathological Report (RTI)

12.மசாஆ 12- எனது மகன் சபரி அய்யப்பனின் இறப்பு சான்று

13.மசாஆ 13- வாரிசு சான்று

14.மசாஆ 14- எனது மகனின் ஆதார் அட்டை நகல்

15.மசாஆ 15- எனது ஆதார் அட்டை நகல் (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது).

16.மசாஆ 16- எனது வங்கி கணக்கு முதல் பக்க நகல்

17.மசாஆ 17- எனது மகன் யுகபிரகாஷின் ஆதார் அட்டை நகல்

எனவே எனது தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்களை ஏற்று மனுப்படி உத்தரவாக வேண்டுகிறேன்.

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எனது மகன் விபத்தின் காரணமாக இறக்கும் போது அவருக்கு எத்தனை வயது என்று கேட்டால் 18 வயது, விபத்தின் போது கியர் வைத்த இருசக்கர வாகனத்தை ஓட்டி சென்றார் என்றால் சரிதான். விபத்தானது எங்கு நடைபெற்றது என்று கேட்டால் மீன்கரை ரோட்டில் வளந்தாயமரம் பஸ் ஸ்டாப் அருகே நடந்தது. எனது மகன் ஓட்டி சென்ற இருசக்கர வாகனத்திற்கு காப்பீடு இல்லை என்றால் சரிதான். எனது மகனுக்கு 18 வயது என்பதால் ஓட்டுநனர் உரிமம் விபத்து சமயத்தில் இல்லை

என்றால் சரிதான். எனது மகன் இளவராக இருப்பதால் அவர் வாகனத்தை கவனக்குறைவாக இயக்கி அவர் தான் விபத்திற்கு காரணம் என்றால் சரியல்ல. எனது மகன் தீடீரென்று ரோட்டை கடந்த காரணத்தினால் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. விபத்திற்கு பின்னிட்டு எந்த மருத்துவ மனையில் சிகிச்சை பெற்றார் என்று கேட்டால் முதலில் ஆல்வா மருத்துவமனையிலும் பின்னிட்டு கங்கா மருத்துவமனையிலும் சிகிச்சை பெற்றார். எனது மகனுக்கு விபத்தினால் தலையில் காயம் ஏற்பட்டதன் காரணமாகத்தான் இறந்துவிட்டார் என்றால் சரிதான். விபத்திற்கு பின்னிட்டு எனது மகன் சுயநினைவு இல்லாமல் பின்னிட்டு இறந்து விட்டார் என்றால் சரிதான். எனது மகன் தலைகவசம் அணியாத காரணத்தினால்தான் தலை காயம் ஏற்ப்பட்டு அது எனது மகனின் இறப்பிற்கு காரணமாகிவிட்டார் என்றால் அது சரியல்ல. விபத்தானது எனது மகனின் கவனக்குறைவால் ஏற்பட்டது என்பதால் விகிதாச்சார அடிப்படையில் இழப்பீடு வழங்க வேண்டும் என்று சொன்னால் அது சரியல்ல. விபத்து சமயத்தில் எனது மகன் எந்த வேலைக்கும் செல்லவில்லை என்றால் சரிதான் கல்லூரிக்கு சென்று கொண்டிருந்தார். சிவா பாலிடெக்னிக் கல்லூரிக்கு சென்று கொண்டிருந்தார். நான் தாக்கல் செய்துள்ள மருத்துவ பில்கள் மிகைப்படுத்தி தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அதில் சில கழிக்க வேண்டிய பில்கள் இணைக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் பல்வேறு தலைப்புகளின் கீழ் கோரியுள்ள இழப்பீடு கிடைக்கதக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. விபத்தானது 1ம் எதிர்மனுதாரரின் கவனக்குறைவால் ஏற்படாத

காரணத்தினால் 3 ம் எதிர்மனுதாரர் இழப்பீடு தர தேவையில்லை என்று சொன்னால் சரியல்ல.

இச்சாட்சியம் என் முன்பு நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அது சரி என்று அவரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி

பொள்ளாச்சி